This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

www.writersujatha.com

# ப்ரியா

எனக்குத் தமிழ் சினிமாவின் ஆகிருதி மிகுந்த நடிக நடிகையர்கள் பற்றி அதிகம் தெரியாது. அவ்வப்போது பொம்மை பார்ப்பேன். எனக்கு அவர்கள் எல்லோரும் புஷ்டியான 'பன்' ரொட்டிகளைப் போல இருப்பதாக அபிப்ராயம். எனவே நான் ப்ரியாவைப் பற்றி இதுவரை கேள்விப்படாமல் இருந்ததில் ஆச்சரியமில்லை... அவளுக்கும் எனக்கும் ஒரு கேஸ் சம்பந்தமாகத் தொடர்பு ஏற்பட்டு, பிற்பாடு அத்தனை லண்டன் விபரீதங்கள் நிகழ்வதற்கு முன் ப்ரியா யார் என்றே எனக்குத் தெரியாது. வசந்த்தான் சொன்னான். மே மாதம் திங்கள் கிழமை என் ஆபீசில் நுழைந்தபோது வசந்த் மிக சமீபத்தில் ஜன்ம சாபல்யம் அடைந்துவிட்டதுபோல் தோன்றினான். நான் உட்கார்வதற்கு முன்னாலே; "பாஸ்! உங்களுக்கு ஜனார்தன் டெலிபோன் செய்தார்" என்றான்.

"ஹூ தி ஹெல் இஸ் ஜனார்தன்?" என்றேன். அவன் எனக்கு இந்தியாவின் தலைநகரம் தெரியவில்லை என்றால்கூட அவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான். "ஜனார்தனைத் தெரியாது? ப்ரியாவின் கணவர். ப்ரியா!"

"ஹூ தி ஹெல் இஸ் ப்ரியா?"

அப்பொழுது அவன் என்னைப் பார்த்த பார்வை!

"ப்ரியாவைத் தெரியாது என்றா சொல்கிறீர்கள்?"

"அவள் என்ன பெரிய மகாராணியா?"

"அதற்கும் மேலே அங்கே பாருங்கள்." ஜன்னலுக்கு வெளியே காட்டினான்.

"என்ன அங்கே? கோர்ட் கட்டிடம்."

"இல்லை! அந்தப் பெரிய போஸ்டரைப் பாருங்கள்.'

இருபத்தைந்து அடி உயரத்தில் பதினைந்துக்கு இருபது குறுக்களவில் ஒரு பெண் ஒருவாரமாக அங்கே ஹோர்டிங்கில் சிரித்துக் கொண்டிருந்தாள். கீழே 'இதய தாகம்' என்ற எழுத்துக்கள். ஒவ்வொரு எழுத்தும் என் உயரம் இருக்கும்' ஏதோ ஒரு மாரிசாமியோ, பெரியசாமியோ மெய் வருத்தம் பார்க்காமல் பல நாட்கள் முனைந்து தீட்டியிருந்த சினிமா விளம்பரம். "ப்ரியா." என்றான் வசந்த் காதலுடன். அவள் அதரங்களில் ஒரு ஆள்படுக்கலாம். அவ்வளவு பெரிய படம். மிக சன்னமான மார்புத் துணியுடன் உற்சாகமாக பிராட் வேயின் பொது திசையை நோக்கிப் பல்வரிசை தெரியச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"மிகப் பிரபலமான சினிமா நடிகை. ஜெய், சிவாஜி, எம்.ஜி.ஆர் எல்லோருடனும் நடித்து விட்டாள். நீங்கள் எந்தத் தமிழ்ப் பத்திரிகையைப் புரட்டியிருந்தாலும் அவளைத் தவிர்த்திருக்க முடியாதே?" மேஜையில் கிடந்த ஒரு வார இதழை எடுத்தான். அதன் பின்பக்க மூவர்ண ராப்பரில், "உங்கள் பெண் கல்யாணத்திற்கு நினைவிருக்கட்டும்.